மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பஸ் நிலையத்திலிருந்து கோவில் வரையில் கார்கள் சென்றால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் என்பதால் கார்கள் அனுமதிக்கப்படவில்லை. எனவே, சிறிய பேருந்துகளை விடுவது என்பது இயலாத காரியம். ஆட்டோரிக்சா கட்டணத்தைப் பொறுத்தவரையில் கோவிலுக்குச் செல்லும் பக்தர்களிடமிருந்து பகலில் 4.00 ரூபாயும், இரவில் 6.00 ரூபாயும் மட்டும்தான் வசூல் செய்ய வேண்டுமென்று ஆட்டோரிக்சா டிரைவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கிற பலகையில் இதுபற்றி வட இந்திய பக்தர்களும் புரிந்துகொள்ளும் வகையில் தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு போன்ற எல்லா மொழிகளிலும் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. அதை மீறி அதிகக் கட்டணம் கேட்டால் அங்கே இருக்கிற காவல் நிலையத்தில் பயணிகள் தாராளமாக புகார் செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில சமூக விரோதிகள் செய்கின்ற தவறுகள் என்று குறிப்பிட்டதற்கான விவரம் தற்போது என்னிடம் இல்லை. இப்போதுதான் அதுபற்றித் தெரிவித்திருக்கிறார்கள். அதை எழுத்து மூலமாகத் தந்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சிறிய அரிசி ஆலைகளுக்கு உரிமம் வழங்கும் அதிகாரத்தை மாவட்ட அதிகாரிகளுக்கு வழங்குதல்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சிறிய அரிசி ஆலை உரிமம் பெறவும், பெயர் மாற்றம் செய்யவும் அரசின் ஒப்புதல் பெறுவதற்கு மாறாக மாவட்ட அளவிலேயே அனுமதி பெறலாம் என்றும், அரசிற்கு வேண்டுகோள் அனுப்பக் கூடாது என்று தடை விதித்தும் கடந்த ஆகஸ்ட் மாதத்தில் அரசு அறிவிப்பு செய்தும், இதுநாள் வரை உரிய ஆணையை அரசு பிறப்பிக்காமை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

அரிசி அரைவைத் தொழில் (முறைப்படுத்தல்) சட்டம், 1958 மற்றும் அரிசி அரைவைத் தொழில் (முறைப்படுத்தல் மற்றும் உரிமம் வழங்குதல்) விதிகள் 1959-ன்படி, அரிசி ஆலைகளுக்கான அனுமதிகள் மற்றும் உரிமங்கள் வழங்கப்படுகின்றன. மேலே குறிப்பிட்ட சட்டமும் விதிகளும் மத்திய அரசால் இயற்றப்பட்டவை. மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அனுமதி/உரிமம் வழங்கும் அதிகாரம் அளித்துள்ளது.

1989 ஏப்ரல் 7] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மாவட்ட நிர்வாகத்தைத் துரிதப்படுத்துவதற்கு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் தெரிவித்த பல கருத்துக்களில் ஒன்றாக, அப்போது அரசிடம் இருந்த அரிசி ஆலை அனுமதி வழங்குதல் அதிகாரத்தை மாவட்ட ஆட்சியர், கூடுதல் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியவர்களுக்கு வழங்கலாம் எனத் தெரிவித்தார். இக்கருத்தை அரசு பரிசீலித்தது. பின்பு சுற்றோட்டத்தில் ஆளுநர் உட்பட ஆணைபெற்று மாவட்ட ஆட்சியர், கூடுதல் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், குடிமைப் பொருள் வழங்கல் துணை ஆணையர் (சென்னை) ஆகியவர்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தை அளிக்க மத்திய அரசுக்கு 3–8–1988-ல் கடிதம் எழுதப்பட்டது. மத்திய அரசு ஆணை கிடைக்கும் வரையில் அரிசி ஆலை பெர்மிட் வழங்க கருத்துருக்களை அரசுக்கு அனுப்ப வேண்டாம் என்று மேல்ல கூறப்பட்ட அலுவலர்களுக்கு அரசு அறிவுரை வழங்கியது. மத்திய அரசு அரிசி ஆலை அனுமதி வழங்கும் அதிகாரத்தை குடிமைப் பொருள் வழங்கு ஆணையர்/மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஒப்படைப்பதற்கு அனுமதி அளித்து அறிவிக்கை (NOTIFICATION) வெளியிட்டுள்ளது. இந்நிலையில் தற்போதுள்ள அரசு, குடியரசுத் தலைவர் ஆட்சிப் பிரகடனத்திற்கு முன்னிருந்தபடி, அரிசி ஆலை நிறுவ அனுமதி வழங்கும் அதிகாரம் மாநில அரசிடமே இருக்கலாம் என்று முடிவு எடுத்துள்ளது. எனவே இவ்வரசு ஏற்கனவே மைய அரசுக்கு அனுப்பிய கருத்துருவை வாபஸ் பெற்றுக் கொள்கிறது என்று மைய அரசுக்கு தெரிவித்து, மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கி மைய அரசு வெளியிட்ட அறிவிக்கையை ரத்து செய்யுமாறு மைய அரசைக் கேட்டுள்ளது. மைய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அதிக அளவில் இன்றைக்கு அரிசி ஆலை உரிமம் தேக்கம் அடைந்திருக்கிற காரணத்தினால், மத்திய அரசுடன் பேசி, வற்புறுத்தி, விரைவிலே ஆணை பிறப்பித்து, அரிசி ஆலை உரிமம் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அரிசி ஆலைக்கு அனுமதி வழங்கக் கூடிய அதிகாரம் இந்த அரசிடம்தான் இருந்தது. குடியரசுத் தலைவர் ஆட்சிப் பிரகடனத்தின்போது 1988-ல் இந்த அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கு வழங்கலாம் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது.

(முற்பகல் 10-30)

அந்த அடிப்படையில் மத்திய அரசும் அதற்கான நோட்டிபிகேஷன் வெளியிட்டுவிட்டது. இருந்தாலும் ஜனவரி மாதம் 27 ஆம் தேதி புதிய அரசு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன், குடியரசுத் தலைவர்

ஆட்சி பிரகடனப்படுத்துவதற்கு முன்பிருந்தபடி அரிசி ஆலைகளுக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் மாநில அரசிடமே இருக்கலாம் என்று முடிவு எடுத்தது. அதற்கான தகவலையும் மத்திய அரசுக்குத் தெரிவித்தது. மத்திய அரசு இப்போது அதை மறு பரிசீலனை செய்து இந்த அரசுக்கு அந்த அதிகாரத்தை வழங்குவதற்கு உத்தரவு பிறப்பிக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(இ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு குறித்து....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு அது எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(4) மானியக் கோரிக்கைகள், 1989–90
விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

கோரிக்கை எண். 17—கல்வி.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,99,72,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் மாணவர்கள் சேரும் பொருட்டு அந்த நிர்வாகங்கள் கேட்கும் அளவுகடந்த பணத்தைக் கொடுக்க இயலாத மாணவர்களும், பெற்றோர்களும் மன முடைந்து நிற்கும் நிலையைப் போக்க வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை மொழிகிறேன் :

'மானியக் கோரிக்கை எண். 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 8,99,72,57,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் பேராவூரணியில ஒரு கலைக் கல்லூரியையும், ஒரு பாலிடெக்னிக்கையும் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :